**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்.**
**முன்னிலை: திரு.R.கைலாஷ், B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர்,**
**சீர்காழி.**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ஆம் நாள் செவ்வாய்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.179/2022
CNR.NO.TNMY08-007022-2022

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் : | அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>திருவெண்காடு காவல் நிலையம்,<br>மயிலாடுதுறை மாவட்டம்,<br>குற்ற எண்.19/2020 |
| /எதிராக/ | |
| குற்றம்சாட்டப்பட்டவர்: | 1. கலியபெருமாள், 64/2020, த/பெ. நாராயணசாமி<br>2. சுந்தரமூர்த்தி, 35/2020, த/பெ. முத்துக்குமரசாமி<br>மேற்கண்ட இருவரும் குச்சிப்பாளையம், சீர்காழி தாலுகா |
| குற்றச்சாட்டு | இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 294(b), 342, 326, 506(ii) |
| குற்றம் நிகழ்ந்த நாள் | 22.01.2020 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 22.01.2020 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 1ம் எதிரி 22.01.2020 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 1ம் எதிரி 29.01.2020<br>2ம் எதிரி மாண்புமிகு அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம் CrImp.No.358/2020.31.01.2020 தேதியிட்ட உத்தரவின் இந்நீதிமன்றத்தில் சரண்டராகி 03.02.2020 தேதியிட்ட உத்தரவின்படி பிணையில் சென்றுள்ளார். |
| கு.வி.மு.ச.பிரிவு 281-ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள் | 18.11.2024 |
| விசாரணை தொடங்கிய நாள் | 24.11.2025 |
| விசாரணை முடிவடைந்த நாள் | 10.03.2026 |
| BNSS 359-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம் | CrImp.No.154/2026, Dismissed |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள் | (see table below) |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | 24.11.2025 | 24.11.2025 |
| அரசு தரப்பு சாட்சி.2 | 24.11.2025 | 24.11.2025 |



KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.10 21:30:40 +0530

| | |
|---|---|
| | அரசு தரப்பு சாட்சி.3 \| 24.11.2025 \| 24.11.2025<br>அரசு தரப்பு சாட்சி.4 \| 24.11.2025 \| 24.11.2025<br>அரசு தரப்பு சாட்சி.5 \| 09.02.2026 \| 09.02.2026<br>அரசு தரப்பு சாட்சி.6 \| 23.02.2026 \| 23.02.2026 |
| கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)–ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 25.02.2026 |
| தலைமறைவு எதிரி குறித்த விபரம் | இல்லை |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம் | இல்லை |
| தாமதத்திற்கான காரணம் | போலிசார் எதிரிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்வதில் தாமதம் ஏற்பட்டது. |
| தீர்மானம் | எதிரிகள் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 342, 326, 506(ii)ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானம் |
| முடிவு | முடிவில் அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் வாயிலாக 1ம் எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 326, 506(ii)ன் கீழும், 2ம் எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 342, 506(ii)ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளி இல்லை என குற்ற விசாரணை முறை சட்டம் 248(1) பிரிவின் படி எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 18.10.2022 தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக இறுதியாக 10.03.2026 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, குற்ற முறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–II திருமதி. K. நிவேதா அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. அப்துல்லாஷா அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இன்று நீதிமன்றம் வழங்கிடும்.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.10 21:30:48 +0530

**தீர்ப்புரை**

1. இவ்வழக்கானது, கடந்த 22.01.2021ம் தேதி காலை 08.30 மணிக்கு குச்சிப்பாளையத்தை சேர்ந்த புகார்தாரர் சுரேஷ் என்பவரின் வீட்டு வாசலுக்கு 1,2 எதிரிகள் ஆகியோர் வந்து முன்விரோதம் காரணமாக அவரை பார்த்து 'குச்சிக்காரி மகனே தேவுடியா மகனே' என்று காமகுரோதமான வார்த்தைகளால் திட்டி, 2வது எதிரி அவரை பிடித்துக் கொள்ள, 1வது எதிரி அவர் கையில் வைத்திருந்த அருவாளால் புகார்தாரரை தாக்கி அவருக்கு கொடுங்காயம் உண்டுபண்ணி, எதிரிகள் இருவரும் அவரை பார்த்து 'எங்களிடம் வைத்துக்கொண்டால் உன்னை வெட்டி கொலை செய்து விடுவோம்' என்று மிரட்டியது சம்பந்தமாக, 1ம் எதிரியின் செய்கையானது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 326, 506(ii)ன் கீழும், 2ம் எதிரியின் செய்கையானது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 342, 506(ii)ன் கீழும் தண்டிக்கத்தக்கது என்று கருதி திருவெண்காடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 173(2)ன் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்கு ஆகும்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தால் கடந்த 18.10.2022ம் தேதி கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் 11.11.2024ம் தேதி குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 207ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல் கட்டணமின்றி வழங்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்டு கடந்த 18.11.2024ம் தேதி 1ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 326, 506(ii)ன் கீழும், 2ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 342, 506(ii)ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்றச்சாட்டின் சாராம்சங்கள் குறித்து எதிரிகளிடம் விளக்கி கேட்டபோது, எதிரிகள் 'பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை வேண்டுமென்றும்' கூறினார்கள். எனவே, இவ்வழக்கு சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.1 முதல் 6 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அரசு தரப்பு சான்றாவணம் 1 முதல் 8 குறியீடு செய்யப்பட்டது. எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. பட்டியல் சாட்சிகள் 4,7,8,9 வரையிலானவர்களை உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் விசாரிக்கப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். எதிரிகள் தரப்பில் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த மனு குறியீடு செய்யப்படவில்லை.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.10 21:30:54 +0530

4. இவ்வழக்கில் கடந்த 25.02.2026ம் தேதி அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து, அவற்றை கேள்விகளாக தொகுத்து குற்ற விசாரணை முறை சட்டம் 313(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது, அதனை மறுத்து எதிரிகள் 'பொய் சாட்சி, பொய் வழக்கு' என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சி இல்லை என்றும் கூறினார்கள். ஆகவே, எதிரிகள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு சாட்சிய விசாரணைகள் முடிக்கப்பட்டதால் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

5. அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.6ன் சாட்சியத்தின் மூலமாகவும், குறியீடு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 8 ஆவணங்கள் வாயிலாகவும், அரசு தரப்பு வழக்கை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும், அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

6. இவ்வழக்கின் புகார்தார் உட்பட அரசு தரப்பு சாட்சிகள் எவரும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அரசு தரப்பு சாட்சி.6ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் குற்றவாளி என்று முடிவு செய்ய முடியாது என்றும், எனவே, எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமாறு வாதிடப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்

i) இவ்வழக்கில் எதிரிகள் மீதான இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 342, 326, 506(ii)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**8.தீர்வு:–**

8.1) இவ்வழக்கு எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, இவ்வழக்கின் புகார்தாரரான அரசு தரப்பு சாட்சி.1 தனது புகார் மனுவில், கடந்த 22.01.2020ந் தேதி காலை சுமார் 08.30 மணியளவில் தான் தனது வீட்டில் நின்று கொண்டிருந்ததாகவும், தங்கள் வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் எதிரிகள் தன்னை பார்த்து முன்விரோதம் காரணமாக தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், சுந்தரமூர்த்தி பிடித்து கொள்ள கலியபெருமாள் தனது வலது பக்க கன்னங்குழியில் அரிவாளால் வெட்டியதாகவும், இரத்த காயத்துடன் கீழே கிடந்த தனக்கு எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாகவும்



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.10 21:31:01 +0530

குறிப்பிட்டுள்ள போதிலும், தனது சாட்சியத்தில் கடந்த சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 08.30 மணியளவில் அவர் தனது வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தபோது அங்கு சிலர் கூட்டமாக சண்டையிட்டு கொண்டு இருந்ததாகவும், கூட்டத்தை வேடிக்கை பார்க்க அவர் சென்றபோது கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் அவரை தகாத வார்த்தைகளால் திட்டி, அருவாளால் பின்னால் இருந்து அவரை தாக்கியதாகவும், அந்த நேரம் அவருக்கு சுயநினைவு இல்லாததால் யார் அவரை தாக்கினார்கள் என்று பார்க்க இயலவில்லை என்றும், எதிரிகளுக்கும் அவருக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததால் எதிரிகள் தான் அவரை தாக்கியிருப்பார்கள் என நினைத்து போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டதாகவும், அதில் உள்ள விபரம் அவருக்கு தெரியாது என்றும், போலிசார் அவரை விசாரிக்கவில்லை என்றும் சொல்லி புகார் வாக்குமூலத்தில் உள்ள தன்னுடைய கையெழுத்தை மட்டும் ஒப்புக்கொண்டு, அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார். எனவே இவரது சாட்சியத்தின் மூலம் எதிரிகளை குற்றவாளியாக கருத முடியாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

8.2) இவ்வழக்கு கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1, 2 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், இவ்வழக்கு சம்பந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்கள்.

8.3) இவ்வழக்கு பார்வைமகசர் சாட்சிகளான அ.சா.3 மற்றும் அசா.4 தங்களது சாட்சியத்தில், பார்வை மகசரில் உள்ள தங்கள் கையொப்பத்தை மட்டும் ஒப்புக்கொண்டு போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்று சொல்லி பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்கள்.

8.4) இவ்வழக்கு பார்வைமகசர் சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில், பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் இரண்டாவது கையொப்பம் தன்னுடையது என்றும், அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்.

8.5) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சார்பாக சாட்சியமளித்த திருவெண்காடு காவல்நிலையத்தின் தற்போதைய சிறப்பு உதவி ஆய்வாளரான அரசு தரப்பு சாட்சி.6 தனது சாட்சியத்தில், புகார்தாரரிடம் பெற்ற புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் விசாரணை அதிகாரி எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றியும், சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.10 21:31:07 +0530

வாக்குமூலங்கள் பதிவு செய்தது பற்றியும், வழக்கின் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றது பற்றியும், இறுதியாக இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியமளித்திருப்பினும், இவ்வழக்கின் புகார்தாரரும் எதிரிகளும் சமரசம் செய்து கொண்டதாக கூறி, பிரிவு 359 BNSSன் கீழ் மனு தாக்கல் செய்து அம்மனு 09.02.2026 அன்று Crlmp No.154/2026ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அன்றே தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையிலும், புகார்தாரர் உட்பட கண்ணுற்ற சாட்சிகள் பிறழ்சாட்சிகளாகிவிட்ட நிலையிலும், அரசு தரப்பு சாட்சி.6 ஆன காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக கருதுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. முடிவில் அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் வாயிலாக 1ம் எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 326, 506(ii)ன் கீழும், 2ம் எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 342, 506(ii) கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என குற்ற விசாரணை முறை சட்டம் 278(1) பிரிவின் படி எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

10. எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதிக் கொடுத்த பிணை பத்திரங்கள் வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்பு தானாக இரத்தாக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அதுகுறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.10 21:31:14 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

1. அரசுத் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | திரு.ரமேஷ் | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.2 | திரு.சிவபிரகாசம் | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.3 | திரு.ராஜா | பார்வை மகசர் சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.4 | திரு. செல்வகுமார் | பார்வை மகசர் சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.5 | திரு. சுரேஷ் | புகார்தாரர் |
| அரசு தரப்பு சாட்சி.6 | திரு.இளஞ்சியம் | தற்போதைய சிறப்பு உதவி ஆய்வாளர் |

2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்–1/ அரசு தரப்பு சாட்சி.3 | 22.01.2020 | பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–2/ அரசு தரப்பு சாட்சி.4 | 22.01.2020 | பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–3/ அரசு தரப்பு சாட்சி.5 | 22.01.2020 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து |
| அரசு தரப்பு சான்றாவணம்–4/ அரசு தரப்பு சாட்சி.6 | 22.01.2020 | புகார் வாக்குமூலம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–5/ அரசு தரப்பு சாட்சி.6 | 22.01.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அரசு தரப்பு சான்றாவணம்–6/ அரசு தரப்பு சாட்சி.6 | 22.01.2020 | பார்வை மகஜர் |
| அரசு தரப்பு சான்றாவணம்–7/ அரசு தரப்பு சாட்சி.6 | 22.01.2020 | மாதிரி வரைபடம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–8/ அரசு தரப்பு சாட்சி.6 | 22.01.2020 | காயச்சான்று |



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.10 21:31:24 +0530

3. அரசு தரப்பு சான்று பொருட்கள்:  இல்லை.

4. எதிரிகள்  தரப்பு சாட்சிகள்: இல்லை.

5. எதிரிகள்  தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று  பொருள்:  இல்லை

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.10 21:31:31 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

குறிப்பு

1.தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2.இவ்வழக்கு விசாரணையின்போது எதிரிகள்  நீதிமன்ற பிணையில் இருந்து வருகின்றார்கள்.
3.இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

நகல்
1)மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், மயிலாடுதுறை அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.